பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

29 05 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தலில் ஏழாவது கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் நாளை முடிவடைவதையொட்டி அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.
2. மக்களவைக்கு நடைபெற்ற ஆறாவது கட்ட தேர்தலில் 63 புள்ளி மூன்று ஏழு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
3. இந்திய ராணுவ அதிகாரி மேஜர் ராதிகா சென் ஐ நா-வின் அமைதிக்கான ராணுவ விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
4. மிஸோராமில் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 28-ஆக அதிகரித்துள்ளது.
5. பேங்காக்கில் நடைபெற்று வரும் உலக ஒலிம்பிக் தகுதிக்கான குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Nishant Dev** மற்றும் **Sachin Siwach** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--- *இனி விரிவான செய்திகள்* ---

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் நாளையுடன் நிறைவடைகிறது.

ஏழு மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 57 தொகுதிகளில் வரும் சனிக்கிழமை இறுதிகட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

பிரச்சாரம். நிறைவடைய இன்னும் ஒரு நாள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில், அரசியல் கட்சித்தலைவர்களும், வேட்பாளர்களும் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி நேற்று கொல்கத்தாவில் நடைபெற்ற மாபெரும் சாலை பேரணியில் கலந்து கொண்டார்.

இரண்டரை கிலோமீட்டர் தூரத்திற்கு இந்த பேரணி நடைபெற்றது.

இதில் மேற்குவங்க மாநிலத்தின் பிஜேபி தலைவர் சுகந்தா மஜூம்தர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பஞ்சாப் மாநிலம் மொகாலியில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிஜேபி மூத்த தலைவர் திரு ராஜ்நாத்சிங், அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் 33 சதவீத பெண்கள் இருப்பதை தமது கட்சி உறுதி செய்யும் என்று கூறினார்.

ஜம்மு-கஷ்மீருக்கு தனி அந்தஸ்து வழங்கிய அரசியல் சட்டப்பிரிவை நீக்கியது, அயோத்தியில் ராமர் கோவில் கட்டியது உள்ளிட்ட தேர்தல் வாக்குறுதிகளை தாங்கள் நிறைவேற்றி இருப்பதாகத் தெரிவித்தார்.

அடுத்த மூன்று ஆண்டுகளில் உலகின் மிகப்பெரிய மூன்று பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியாவை கொண்டு வருவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

சந்திரயான் மூன்று பயணத் திட்டத்தில் இந்தியாவின் லேண்டரை பத்திரமாக நிலவில் தரையிறக்கி இந்தியா படைத்த சாதனையை உலக நாடுகள் பாராட்டி உள்ளதாக திரு ராஜ்நாத்சிங் கூறினார்.

இமாச்சல பிரதேச மாநிலம் உணா மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி, கடந்த பத்து ஆண்டுகளில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, பணவீக்கத்தை குறைக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் தவறிவிட்டதாகக் குற்றம்சாட்டினார்.

இமாச்சல பிரதேசத்தில் கடந்த ஆண்டு பெருமழையால் ஏற்பட்ட பாதிப்பை தேசிய பேரிடராக பிஜேபி அரசு அறிவிக்கவில்லை என்று திருமதி பிரியங்கா காந்தி கூறினார்.

மக்களவைக்கான தேர்தல் கடந்த மாதம் 19-ஆம் தேதி தொடங்கி, ஏழு கட்டங்களாக நடைபெற்று வருகின்றன.

இதுவரை ஆறு கட்டத்தேர்தல்கள் முடிவடைந்துள்ளன.

இதற்கிடையே அடுத்த மாதம் 4-ஆம் தேதி நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கைக்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்து, தேர்தல் ஆணையம் ஆலோசனை மேற்கொண்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கையின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், கண்காணிப்பு கேமராக்களை பொருத்துவது, வாக்கு எண்ணும் மையங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.

இந்நிலையில் மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் வாக்கு எண்ணிக்கை தொடர்பான பணிகளை துரிதப்படுத்தி வருகின்றனர்.

வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலில் கடந்த ஆறாவது கட்டமாக 58 தொகுதிகளுக்கு நடைபெற்ற வாக்குப்பதிவில் 63 புள்ளி மூன்று ஏழு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஏழு கோடியே ஐந்து லட்சத்து 44 ஆயிரத்து தொள்ளாயிரத்து 33 பேர் தங்களது வாக்குரிமையை செலுத்தி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால் வாக்குகளும் எண்ணப்பட்ட பிறகு இறுதி வாக்கு சதவீதம் தெரியவரும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ஏழாவது கட்ட தேர்தலில் மக்களவைத் தொகுதி வாரியாக வாக்காளர் பட்டியலையும் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

[]<<<>>>[]

ஓமனில் உள்ள இந்திய வம்சாவழியினர் குறித்த தகவல்களை ஆவணப்படுத்தும் திட்டத்தை தேசிய தொல்பொருள் காப்பகமும். அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகமும் இணைந்து செயல்படுத்தியுள்ளன.

இம்மாதம் 19-ஆம் தேதி முதல் 27-ஆம் தேதி வரை இதற்கான சேகரிப்புப் பணிகள் நடைபெற்றன.

குஜராத்தைச் சேர்ந்த 32 குடும்பங்கள் ஓமனுக்குச் செனறு 250 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஓமனில் உள்ள இந்திய வம்சாவழியினர் குறித்த தகவல்களை சேகரித்தது.

இந்த தகவல்களை மின்னணு கட்டமைப்புக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஆங்கிலம், குஜராத்தி, ஹிந்தி மற்றும் அரபிக் மொழிகளில் உள்ள ஆவணங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

**[]<<<>>>[]**

இந்திய ராணுவ அதிகாரி மேஜர் ராதிகா சென் ஐ நா-வின் அமைதிக்கான ராணுவ விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அமைதிக்கான நடவடிக்கைகளில் அவர் சிறப்பாக செயல்பட்டதாகவும், மகளிர் மற்றும் பெண் குழந்தைகளின் அங்கீகாரம் மற்றும் உரிமைக்காக குரல் கொடுத்ததற்காக அவருக்கு இந்த உயரிய விருது வழங்கப்படுகிறது.

அவருக்கு பாராட்டு தெரிவித்துள்ள ஐ நா பொதுச்செயலாளர் திரு ஆண்டனியோ குட்டாரஸ், தலைமைப் பொறுப்பை ஏற்று சிறப்பாக செயல்படுவதிலும், முன்மாதிரியாக சேவையாற்றுவதிலும் மேஜர் ராதிகா சென் சிறப்பாக செயல்பட்டார் என்று கூறியுள்ளார்.

அவரது சேவை ஐ நா நடவடிக்கைகளுக்கு சிறந்த பங்களிப்பாக திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய ஐ நா பொதுச்செயலாளரின் செய்தி தொடர்பாளர் திரு **Stephana Dujarric** இந்த உயரிய விருதை நாளை நடைபெறும் நிகழ்ச்சியில் ஐ நா பொதுச்செயலாளர் வழங்க உள்ளதாகத் தெரிவித்தார்.

மகளிர் மற்றும் பெண் குழந்தைகளை பாலியல் வன்முறையிலிருந்து பாதுகாப்பதற்கான ஐ நா பாதுகாப்பு சபையின் தீர்மானத்தை கொண்டு வருவதற்கு மேஜர் ராதிகா சென் முக்கிய பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.,

இமாச்சல பிரதேசத்தில் பிறந்த ராதிகாசென், உயிரி தொழில்நுட்ப பொறியாளராக மும்பையில் உள்ள இந்திய தொழில்நுட்ப கழகத்தில் முதுநிலை பட்டம் பெற்றவர்.

[]<<<>>>[]

ஏவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை ஒரே வாரத்தில் இரண்டு முறை அடைந்தவர் என்ற வரலாற்று சாதனையை சத்தியதிப் குப்தா படைத்துள்ளார்.

எட்டாயிரத்து 516 மீட்டர் உயரம் கொண்ட லோட்சி சிகரத்தை கடந்த திங்கட்கிழமை அடைந்த குப்தா, நேற்று நள்ளிரவில் எட்டாயிரத்து 849 மீட்டர் உயரம் கொண்ட எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்துள்ளார்.

சத்தியதிப் குப்தா முன்னதாக இம்மாதம் 21-ஆம் தேதி எவரெஸ்ட் சிகரத்தையும், லோட்சி சிகரத்தை இம்மாதம் 22-ஆம் தேதியும் சென்றடைந்தார்.

[]<<<>>>[]

நாட்டின் வடகிழக்கு எல்லைப்பகுதியில் ரொஹிங்கியா உள்ளிட்ட பங்ளாதேஷை சேர்ந்தவர்கள் ஊடுறுவுவதற்கு காரணமாக இருந்த முக்கிய குற்றவாளியை தேசிய புலனாய்வு அமைப்பினர் கைது செய்துள்ளனர்.

திரிபுராவைச் சேர்ந்த ஜலில்மியா என்ற இந்த நபர், ஊடுறுவலுக்கு பல ஆண்டுகளாக உதவி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய புலனாய்வு அமைப்பு கூறியுள்ளது.

அஸ்ஸாம் சிறப்பு அதிரடிப்படை உதவியுடன் இந்த குற்றச் செயலில் ஈடுபட்ட மேலும் 33 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவுக்குள் ஊடுறுவியை பங்ளாதேஷ் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு அடையாள ஆவணங்களை ஜலில்மியா போலியாக தயாரித்து கொடுத்திருப்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

[]<<<>>>[]

ஹரியானா மாநிலம் சோனிப்பட்டில் ரப்பர் தொழிற்சாலை ஒன்றில் நேற்று மாலை ஏற்பட்ட தீ விபத்தில் 45 தொழிலாளர்களுக்கு தீக்காயம் ஏற்பட்டது.

இதில் ஐந்து பேர் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த தொழிலாளர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**[]<<<>>>[]**

மிஸோராமின் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 28-ஆக அதிகரித்துள்ளது.

ரெமல் புயல் காரணமாக எற்பட்ட கனமழை மற்றும் சூறைக்காற்றால் இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

ஐஸ்வாலில் ஏற்பட்ட நிலச்சரிவில் ஐந்து கட்டிடங்கள் அடித்துச் செல்லப்பட்டன.

நிலச்சரிவில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு நான்கு லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்க அம்மாநில முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா மாநிலம் பால்கர் ரயில் நிலையத்தில் சரக்கு ரயிலின் ஐந்து பெட்டிகள் தடம்புரண்டன.

இதனால் குஜராத் மாநிலத்திலிருந்து – மும்பை வரும் ரயில்கள் தாமதமாகியுள்ளன.

இதனால் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை என்று மேற்கு ரயில்வேயின் தகவல் தொடர்பு அதிகாரி திரு சுமித் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

நெதர்லாந்து நாட்டின் புதிய பிரதமராக திரு **Dick scoof** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஏட்டு கட்சிகள் அடங்கிய கூட்டணி அரசுக்கு தலைமைப் பொறுப்பேற்று திரு ஸ்கூஃப் பிரதமராக பதவி வகிப்பார்.

அந்நாட்டின் நீதித்துறை அமைச்சகத்தில் அதிகாரியாக பணியாற்றிய 67 வயதான அவர், பாதுகாப்பு மற்றும் புலம்பெயர்தல் தொடர்பான விஷயங்களில் நிபுணத்துவம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் சில வாரங்களில் அவரது அமைச்சரவை மன்னர் வில்லியம் அலெக்சாண்டரின் ஒப்புதலுடன் அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

நாட்டில் வெப்ப அலையின் தாக்கம் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு அதிகரித்து காணப்படுவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் **Churu**-வில் நேற்று அதிகபட்ச வெப்பநிலையாக 50 புள்ளி ஐந்து டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது.

தில்லி புறநகர் பகுதியான முன்கேஸ்பூரில் 49 புள்ளி ஒன்பது டிகிரி செல்சியஸ் பதிவாகியது.

எமது செய்திப்பிரிவுக்கு பேட்டியளித்த இந்திய வானிலை ஆய்வு மைய விஞ்ஞானி டாக்டர் ஜனாமணி, நாட்டின் வடமேற்கு மாநிலங்களில் மேலும் இரண்டு நாட்களுக்கு வெப்ப அலை நீடிக்கும் என்று தெரிவித்தார்.

அதன் பிறகு படிப்படியாக வெப்பநிலை குறையக்கூடும் என்றும் அவர் கூறினார்.,

ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி மற்றும் உத்திரபிரதேசத்தில் இயல்பைவிட ஆறு டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரித்துள்ளது.

இதனிடையே தெற்கு அரபிக்கடல் பகுதியில் தென்மேற்குப் பருவமழை தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ரெமான் புயலை அடுத்து வடகிழக்கு மாநிலங்களில் மிக கனமழை பெய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூரில் ரெமான் புயல் காரணமாக கனமழை பெய்து வருகிறது.

இதனால் அம்மாநிலத்தில் உள்ள ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அபாயகட்டத்தை தாண்டியுள்ளது.

கனமழை காரணமாக பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

நோனி மாவட்டத்தில் ஈரான் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் கனமழையால் நேற்று அடித்துச் செல்லப்பட்டது.

முணிப்பூரில் இன்று முதல் மூன்று நாட்களுக்கு பள்ளிக் கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தாய்லாந்து நாட்டின் பேங்காக்கில் நடைபெற்று வரும் உலக ஒலிம்பிக் தகுதிக்கான குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Nishant Dev and Sachin Siwach** ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

நிஷாந்த் 71 கிலோ எடைப்பிரிவில் மங்கோலிய வீரரை தோற்கடித்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதிபெற்றார்.

சச்சின் 57 கிலோ எடைப்பிரிவில் டென்மார்க் வீரரை தோற்கடித்தார்.